**எரிசக்தித் துறை**

## <u>மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பதற்கான புதிய அறிவிப்புகள் 2020–21</u>

1 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ஊராட்சிக் கோட்டையில் அமைந்துள்ள கீழ்மேட்டூர் தடுப்பணை புனல் மின் நிலையம்–4ன் 18 தடுப்பணை கதவுகளையும், செப்பனிடும் / மாற்றும் பணிகள் **ரூ. 35 கோடி மதிப்பீட்டில்** படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

2 ஒரு மெகாவாட் திறன் கொண்ட மின் ஆற்றல் சேமிப்புடன் கூடிய சூரிய சக்தி மின்நிலையங்களை, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ. 6 கோடி மதிப்பீட்டில்** தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் துணை மின் நிலையங்களில் உள்ள உபரி நிலங்களில் அமைப்பதன் மூலம் விவசாயிகளை பகற்பொழுதில் விவசாயம் செய்ய ஊக்குவிப்பதுடன் உபரியாக இருக்கும் மின்சாரத்தை சேமித்து உச்ச நேர மின் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படும். இது ஒரு சோதனை முயற்சியாக செயல்படுத்தப்படும்.

3 சூரிய மின்னாற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாட்டில் 2020–21ஆம் ஆண்டில் 50 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மேற்கூரை அமைப்புகள் **ரூ.250 கோடி மதிப்பீட்டில்** நிறுவப்படும்.

4 தமிழகத்தின் மாறிவரும் மின்கட்டமைப்பு மற்றும் மின் உற்பத்தி வளங்களின் கலவையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை எதிர்கொள்ளவும், புதைபடிவ எரிபொருள் மின் நிலையங்களின் மீதான சார்பை குறைத்து, சுத்தமான ஆற்றலை நோக்கி நகர்வதன் மூலம், காற்றில் கலக்கும் கார்பன் தடங்களை குறைப்பதற்காகவும், தமிழக அரசு புதுமையான வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது. இந்நோக்கத்தில், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமும் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகமும், அமெரிக்காவின் தேசிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆய்வகத்துடன் (National Renewable Energy Laboratory – NREL, USA) இணைந்து "தமிழ்நாடு மின் கட்டமைப்பின் தன்மை மாற்றம்" குறித்த ஒரு கூட்டு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

5 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** இந்த வருடம், 50,000 புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும்.

இதில், 25,000 விண்ணப்பதாரர்களுக்கு விரைந்து விவசாய மின் இணைப்பைப் பெறும் வகையில் விரைவு (துட்கல்) மின்னிணைப்பு வழங்கல் திட்டத்தின் மூலம் விவசாய மின் இணைப்பு பெற காத்திருப்பு பட்டியலிலுள்ள விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் 5 குதிரைத்திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம், 7.5 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம், 10 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் மூன்று இலட்சம் மற்றும் 15 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் நான்கு இலட்சம் வீதம் ஒரு முறை கட்டணம்

செலுத்துதல் மூலம் இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்படும்.

மேலும், **25,000** விண்ணப்பதாரர்களுக்கு சாதாரண வரிசை முன்னுரிமை, சுயநிதி திட்டம் மற்றும் அரசு திட்டங்களின் மூலம் இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்படும்.

6 மின்சார வாகனத்தின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காகவும், மின்சார வாகனம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக அலுவலர்களின் பயன்பாட்டிற்காக **ஆண்டொன்றிற்கு ரூ.1 கோடி செலவில்** மின்சார வாகனங்கள் உபயோகப்படுத்தப்படும்.

7 நுகர்வோர்கள் தாங்கள் உபயோகிக்கும் மின்சாரத்தினை சிறப்பான முறையில் கட்டுப்படுத்தவும், மின்சார வாரியத்தின் வருவாயை பெருக்குவதற்காகவும் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** அனைத்து மத்திய மாநில அரசு அலுவலகங்கள்/நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் ப்ரீபெய்டு மின்னளவிகள் (Prepaid meters) பொருத்தும் திட்டம் **ரூ.390 கோடி மதிப்பீட்டில்** செயல்படுத்தப்படும்.

8 மின்னணு முறையில் பணம் செலுத்தும் **2.7** கோடி தாழ்வழுத்த மின்நுகர்வோர்களுக்கு ஒரு மேம்படுத்தப்பட்ட சேவையை கொடுக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பி.ஓ.எஸ் (PoS) இயந்திரம் மூலம் பற்று/வரவு (Debit/Credit) அட்டைகளை கொண்டு "மின்னணு முறையில் பணம் செலுத்தினால் வீட்டு வாசலிலேயே வசூல்" என்ற கூடுதல் வசதி **ரூ.1.75 கோடி மதிப்பீட்டிலும் ரூ.0.20 கோடி வருடாந்திர செலவிலும்**

அறிமுகப்படுத்தப்படும். இவ்வசதி எல்லா மின் நுகர்வோர்களும் குறிப்பாக மூத்த குடிமக்கள் (Senior Citizen) மற்றும் மாற்று திறனாளிகள் தங்கள் மின் கட்டணத்தை இலகுவாக செலுத்த ஏதுவாக இருக்கும்.

9 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மின் பகிர்மான வட்டங்களில் மின் நுகர்வோர் குறைத்தீர்க்கும் உதவி எண் **1912** மூலம் இயங்கும் கணினி மயமாக்கப்பட்ட மின் நுகர்வோர் குறை தீர்க்கும் சேவை மையங்களில், மின் நுகர்வோர் கொடுக்கும் புகார்களின் பதிவு பற்றிய தகவலும் மற்றும் அப்புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களும் குறுந்தகவலாக நுகர்வோர்களுக்கு அனுப்பும் வசதி செயல்படுத்தப்படும்.

10 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மின்நுகர்வோரின் புகார்களை கைபேசி செயலி மூலம் பதிவிடுதல் மற்றும் நிவர்த்தி செய்தல் ஆகியவை **ரூ.0.50 கோடி செலவில்** அறிமுகப்படுத்தப்படும்.

11 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் ஆதார் உடன் கூடிய தொடுவுணர்வு கருவி (Bio-Metric) முறையிலான வருகை பதிவேடு முறைமை **ரூ.0.70 கோடி மதிப்பீட்டிலும், ரூ.0.30 கோடி வருடாந்திர செலவிலும்** தேசிய தகவல் மையம் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும்.

12 ஆரம்பக்கட்ட பதவிகளில் உள்ள காலிப் பணியிடங்களை கருத்திற்கொண்டும், தடையற்ற மின்சாரத்தை வழங்கும் நோக்கிலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் கேங்மேன்

(பயிற்சி) எனும் புதிய பணியிடம் உருவாக்கப்பட்டது. கடந்த ஆண்டு நடைப்பெற்ற மேற்காண் பணியிடத்திற்கான உடற்தகுதி தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு மார்ச் மாத இறுதியில் எழுத்து தேர்வு நடைபெறவுள்ளது. இந்நிலையில் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** இப்பணி நியமனத்தில் **ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 5000 பணியிடங்களின் எண்ணிக்கை 10,000—ஆக உயர்த்தப்படும்.**

13 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்தைப் பிரித்து தென்காசி மாவட்டத்தில் புதிதாக ஒரு மின்பகிர்மான வட்டம் **ரூ. 8.50 கோடி மதிப்பீட்டில்** உருவாக்கப்படும்.

14 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** புதுப்பிக்கத்தக்க எரிசக்திகளான சூரிய, காற்று, உயிரிவாயு மற்றும் மின் வாகனம் போன்றவற்றின் வளர்ச்சி / மேம்பாட்டிற்காக பங்களித்த புகழ்பெற்ற நபர்களை கவுரவிக்கும் விதமாக “**புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வெற்றியாளர்**” என்ற பெயரில் விருதுகள் ஆண்டுதோறும் மூன்று நபர்களுக்கு வழங்கப்படும். மேலும், **தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் தலா ரூ.10,000/— ரொக்கப்பரிசும், தமிழக அரசின் நற்சான்றிதழும்** வழங்கப்படும்.

15 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** நாட்டின் முதன்முறையாக, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையானது, தேசிய காற்று சக்தி நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் 10 மெகாவாட் திறனில், **மின் சேமிப்பானுடன் கூடிய காற்று சூரிய கலப்பின மின் உற்பத்தி நிலையத்தினை, உலகத் தரத்தில் மாதிரித்திட்டமாக ரூ.75 கோடி மதிப்பீட்டில்,** தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் கயத்தார்

என்னும் இடத்தில், முந்தைய அறிவிப்பினைத் தொடர்ந்து செயல்படுத்தும்.

16 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பசுமைக்குடில் வாயு வெளியீட்டை குறைப்பதற்காகவும் காற்றின் தரத்தை மேலும் முன்னேற்றவும், சூரியசக்தி வாகன மின்னூட்ட (Solar EV charging) முறையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஏதேனும் ஒரு அரசு வளாகத்தில் தோராயமாக **ரூ.75 இலட்சம் செலவில் ஒரு முன்னோடி சூரியசக்தி வாகன மின்னூட்ட நிலையம்,** அனைத்து வசதிகளையும் கொண்டு (வேகமாக, மிதமாக, மெதுவாக மின்னேற்றும்) நிறுவப்படும். இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதைப் பொறுத்து, மேலும் நீட்டிக்கப்படும்.

17 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழகத்தில், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையால் மின்கட்டமைப்புடன் இணைக்கப்படாத சூரியசக்தி மின் நிலையங்கள், 1 கி.வாட்டிலிருந்து 10 கி. வாட் வரை, 2 மெகா வாட் கூட்டுத்திறனுடன் மத்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் தகுந்த நிதியுதவியுடன் நிறுவப்படும்.

18 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** அரசுத் துறையில் மின்சார வாகன பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும், செயல் விளக்கமளிப்பதற்கும் மற்றும் அலுவலக பயன்பாட்டிற்கும், முதல் கட்டமாக **ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று மின்வாகனங்களை** (Electric Car), இந்திய அரசுத் துறைகளுக்கு தற்போது வழங்கி வரும் பொதுத்துறை நிறுவனமாகிய EESL நிறுவனம் மூலமாக, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை கொள்முதல் செய்யும்.

19 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, சென்னை போக்குவரத்துத்துறையுடன் இணைந்து, **ரூ.7.4 இலட்சம் மதிப்பீட்டில்** சென்னை நகரில் தற்போதுள்ள போக்குவரத்து சிக்னல்கள் மற்றும் கண்காணிப்பு கேமராக்களை சேமிப்புடன் கூடிய சூரிய மின் நிலையம் மூலம் இயக்குவதற்கு தேவையான முயற்சிகளை படிப்படியாக மேற்கொள்ளும்.

20 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மாண்புமிகு முதலமைச்சரின் பசுமை வீடுகள் மற்றும் சூரிய சக்தியின் மூலம் மின்னூட்டும் தெருவிளக்குகள் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வெளியிடப்பட்ட அரசாணையின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்பட்ட தற்காலிக உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் **ஆண்டுக்கு ரூ.2.80 கோடி செலவில் பணிநிரந்தரம் செய்யப்படுவர்.**

21 நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மரபு எரிசக்தி வாகனங்களால் ஏற்படும் கரிம வாயு உமிழ்வுகளை குறைப்பதற்காக, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையானது, மத்திய அரசின் தகுந்த உதவித் தொகை கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோகிப்பாளர்கள் மூலம் மின்சார இருசக்கர வாகனங்களை பயனாளிகளுக்கு வழங்குவதற்குத் தேவையான உதவிகளை வழங்கும்.

22 **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் மின்தூக்கிகள் (Lifts), இயங்கும் படிக்கட்டுகள்

(Escalators) மற்றும் இதர மின் அமைப்புகள் தொடர்பாக காலதாமதமின்றி உரிமம் வழங்க ஏதுவாகவும் உயர் மின்னழுத்த அமைப்புகளின் வரைபடக் கூர்ந்தாய்வு செய்வதில் கோட்ட அலுவலர்களுக்கு தொழில்நுட்ப உதவி புரியவும், பரிசோதனைகள் மேற்கொள்ளவும் இதன் மூலம் மக்களுக்கான மின் பாதுகாப்பினை உறுதி செய்ய மின் ஆய்வுத் துறையில் **இளநிலை மின் ஆய்வாளர் நிலையில் ஆண்டொன்றிற்கு ரூ.90.48 இலட்சம் தொடர் செலவினத்தில், 20 பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்படும்.**

23 மின் ஆய்வுத் துறையின் அலுவலக நிர்வாகத்தில் உதவி புரியவும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் ஆய்வுப் பணிகளில் ஈடுபடும் ஆய்வு அலுவலர்களுக்கு உதவிபுரியவும் மற்றும் இணையதள சேவையினை பயன்படுத்தி நாள்தோறும் பதிவேற்றம் செய்து அரசின் சேவைகளை காலதாமதமின்றி கிடைத்திட ஏதுவாகவும் **இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மின் ஆய்வுத்துறை அமைச்சுப் பணியாளர் தொகுதியைச் சார்ந்த நுழைவு நிலைப் பதவியான, **13 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆண்டொன்றிற்கு ரூ.30.42 இலட்சம் தொடர் செலவினத்தில் கூடுதலாக உருவாக்கப்படும்.**